## ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2019** ம் ஆண்டு **மே** மாதம் **31** ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற சாதாரணக்_ கூட்ட நடவடிக்கைகள்.

***முன்னிலை :- திருமதி. அ. மாணிக்க அரசி, எம்.ஏ.,***
***தனி அதிகாரி.***

**பொருள் எண் : 113**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.*

**பொருள் எண் :114**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.*

**பொருள் எண் :115**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் 2018-19 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.*

**பொருள் எண் :116**

*இந்நகராட்சிக்கு 2019-20 ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் வெள்ளை பேப்பர் மற்றும் கம்ப்யூட்டர் பொருட்கள் அ 4, அ 5 பேப்பர் மற்றும் டோனர்கள் மற்றும் சாமான்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ.8,00,000/ க்கு ( எட்டு லட்சம் மட்டும் ) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.*

***அலுவலக குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*
*ந.க.எண் 2967/2019/ பி 2*

**பொருள் எண் :117**

*இந்நகராட்சிக்கு 2019-20 ம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள், மற்றும் பாரங்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ.7,00,000/ க்கு ( ஏழு லட்சம் மட்டும் ) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.*

***அலுவலக குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*
*ந.க.எண் 2968/2019/ பி 2*

**பொருள் எண் :118**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 2 GM Nagar தெருவில் உள்ள பகிர்மானக் குழாய் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு பழுதடைந்த வருவின்ற காரணத்தினால் மேற்கண்ட தெருவிற்கு குடிநீர் விநியோகம் பாதிப்படைந்து சீரான முறையில் குடிநீர் வழங்க இயலாத காரணத்தினால் 2 GM Nagar தெருவில் பழுதடைந்த பகிர்மானக் குழாய்க்கு பதிலாக சுமார் 150 மீட்டருக்கு புதிய பகிர்மான குழாய் அமைத்தால் மட்டுமே குடிநீர் விநியோகம் சீராகும் நிலை உள்ளது. எனவே குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு 2 GM Nagar தெருவில் 150 மீட்டருக்கு பகிர்மானக் குழாய் அமைக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.60,000/ க்கு மன்ற அனுமதிக்காக.*

***ந.க.எண் 5718/2018/ இ2***

**பொருள் எண் :119**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 16,மாரியம்மன் கோவில் தெரு கல்லறை ரோட்டில் உள்ள மினி பவர் பம்பில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் சேதம் அடைந்ததனால் பொது மக்கள் பயன்பெற இயலாத நிலையில் உள்ளனர். எனவே அப்பகுதி மக்களின் குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட தெருவில் பழுதடைந்த சின்டெக்ஸ் டேங்கிற்கு பதிலாக புதிய சின்டெக்ஸ் டேங்க அமைக்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10000/ க்கு மன்ற அனுமதிக்காக.*

***ந.க.எண் 5721/2018/ இ2***

__பொருள் எண் :120__

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 18, கீழப்பட்டி பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள மினி பவர் பம்பில் உள்ள குழாய் சேதம் அடைந்து தண்ணீர் வரவில்லை. தற்போது வறட்சி காலமாக உள்ளதாலும், அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டும், மேற்படி மினி பவர் பம்பில் உள்ள குழாயினை சரி செய்து புதியதாக சின்டெக்ஸ் அமைக்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.35,000/ க்கு மன்ற அனுமதிக்காக.

**ந.க.எண் 5720/2018/ இ2**

__பொருள் எண் :121__

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32, மஞ்சப்பூத் தெருவில் பகிர்மானக் குழாய் பதித்து சுமார் 50 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், குடிநீர் வரத்து சரியாக கிடைக்காத காரணத்தினாலும், மஞ்சப்பூத் தெருவில் புதியதாக பகிர்மானக் குழாய் மற்றும் புதியதாக வால்வு அமைத்தால் மட்டுமே குடிநீர் சீராக வழங்க இயலும் நிலையில் உள்ளது. எனவே மஞ்சப்பூத் தெருவிற்கு புதியதாக பகிர்மானக் குழாய் மற்றும் வால்வு அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.93,000/ க்கு மன்ற அனுமதிக்காக.

மேற்கண்ட செலவுத் தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கு.

**ந.க.எண் 2454/2019/ இ2**

__பொருள் எண் :122__

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஜீத் நகர் பணியாளர்கள் குடியிருப்பு எண் 2 மற்றும் 7 ல் பழுதுகளை நீக்கி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மேற்படி குடியிருப்புகளின் முகப்பில் உள்ள வாயில் கதவு (Gate) பழுதடைந்துள்ளதையும் சரி செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்சே மதிப்பீட்டுத் தொகை ரூ.3,70,000/ க்கு மன்ற அனுமதிக்காக.

**ந.க.எண் 2030/2019/ அ 3**

__பொருள் எண் :123__

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் உள்ள முன்னாள் ராணுவ வீரர்களுக்கு மருத்துவமனையாக பயன்படுத்தப்பட்டு தற்போது காலியாக உள்ள கட்டிடத்தை கனரா வங்கிக்கு வாடகைக்கு விடும் பொருட்டு, மேற்படி கட்டிடத்தில் பழுது பணிகளை மேற்கொள்ளவும், Strong Room மற்றும் கழிப்பிடங்கள் அமைக்கவும் அக்கட்டிடத்தில் இடையில் உள்ள சுவர்களை அப்புறப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00/- லட்சத்திற்கு மன்ற அனுமதிக்காக.

**ந.க.எண் 2030/2019/ அ 3**

__பொருள் எண் :124__

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 17, கதவு எண் 94,94/1 மாயாண்டிபட்டி வடக்குத் தெரு திருமதி. இலட்சுமியம்மாள், திருமதி முனியம்மாள், சொத்துவரி பெயர் மாற்றம் தொடர்பாக நகராட்சி வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டதற்கு நகராட்சி வழக்கறிஞர் திரு. சௌந்தரராஜன், BA.,BL, அவர்களுக்கு ரூ.2000/ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

__பொருள் எண் :125__

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மஜீத் நகரில் அமைந்துள்ள பயணியர் விடுதியில் மூன்றுபுறமும் உள்ள தேசமடைந்துள்ள தாழ்வாரத்தின் தரைத் தளத்தில் டைல்ஸ் பதிக்கவும், சுற்றுச் சுவர் அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டமதிப்பீடு ரூ.5.00/– லட்சத்திற்கு 06.02.2019 ம் தேதிய 45 எண்ணிட்ட தீர்மானத்தின்படி அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கி பணி துவக்கியதில் முன்பக்கம் ஏற்கனவே இருந்து சுற்றுச் சுவர் உயரம் குறைவாக இருந்ததால் பாதுகாப்பு கருதி உயரத்தை கூட்டி அமைக்க வேண்டியது அவசியமாயிற்று. மேற்படி கூடுதல் பணியையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.6,49,000/ க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மன்ற அனுமதியை எதிர்நோக்கி கூடுதல் பணியையும் அதே ஒப்பந்தகாரர் மூமும் மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம் அனுமதிக்கு.

**ந.க.எண் 1009/2019/ இ1**

பொருள் எண் :126

2019-20 ம் ஆண்டிற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள வாகனத்திற்கு கீழ்காணும் விபரங்களின்படி சாலை வரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண் | வாகன எண் | வாகனம் | சாலை வரி | சேவை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | TN 67 V 1954 | மினி டேங்கர் லாரி | ரூ. 4500 | ரூ. 50 | ரூ. 4550 |

சாலை வரி ரூ.4500/ மற்றும் சேவை வரி ரூ.50/ ஆக மொத்தம் ரூ.4550/ ஐ வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சாலை வரி மற்றும் சேவை வரியினை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்க.

**ந.க.எண் 2185/2019/ இ2**

பொருள் எண் :127

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட கோவிந்தன் நகர் காலனி கிழமேல் தெருக்களில் தார்தளம் புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண் 88 நாள் 28.02.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 08.03.2019 ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| 2 | திரு. சி. குழந்தை வேலு, ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.19% அதிகம் |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ள அளித்துள்ள ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கு.

**ந.க.எண் 2185/2019/ இ2**

பொருள் எண் :128

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண் TN 67 AQ 8749 க்கு வாகன காப்பீடு 07.05.2019 ம் தேதியில் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 08.05.2019 முதல் 07.05.2020 வரை வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு அவசரம் அவசியம் கருதி காப்பீட்டுத் தொகை ரூ.18,829/- ஐ யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிட், நிறுவனத்திற்கு செலுத்த மன்ற முன் அனுமதிக்கு.

1) அனுமதிக்கலாம்.
2) இச் செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
ந. க. எண் 4036/2013/ எச்1

பொருள் எண் :129

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண் TN 67 AZ 1287 க்கு வாகன காப்பீடு 24.04.2019 ம் தேதியில் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 25.04.2019 முதல் 24.04.2020 வரை வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு அவசரம் அவசியம் கருதி காப்பீட்டுத் தொகை ரூ.29,521/- ஐ யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிட், நிறுவனத்திற்கு செலுத்த மன்ற முன் அனுமதிக்கு.

1) அனுமதிக்கலாம்.
2) இச் செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
ந. க. எண் 4036/2013/ எச்1

**பொருள் எண் :130**

2019-20 ம் ஆண்டிற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகனங்களுக்கு கீழ்காணும் விபரங்களின் படி வட்டார போக்குவரத்து துறைக்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ.எ ண் | வாகன எண் | வாகனம் பெயர் | சாலை வரி | பசுமை வரி | கூடுதல் வரி | சர்வீஸ் சார்ஜ் | சாலை வரி ரொக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN 84 4592 | டிரைலர் | Rs.1600 | -- | Rs.16 | Rs.10 | -- |
| 2 | TN 67 K 9704 | டிராக்டர் | Rs.440 | Rs.500 | Rs.5 | Rs.10 | -- |
| 3 | TN 67 K 1273 | டம்பர் பிளேசர் | Rs.3000 | Rs.500 | Rs.30 | Rs.10 | -- |
| 4 | TN 67 AZ 1287 | டம்பர் பிளேசர் | Rs.3000 | Rs.500 | Rs.30 | Rs.10 | -- |
| 5 | TN 67 AX 5009 | டிப்பர் லாரி | Rs.3800 | Rs.500 | Rs.38 | Rs.10 | -- |
| 6 | TN 84 C 9626 | காம்பாக்டர் | Rs.3800 | Rs.500 | Rs.38 | Rs.10 | -- |
| 7 | TN 67 K 4717 | ஆட்டோ | Rs.1200 | Rs.500 | Rs.12 | Rs.10 | -- |
| 8 | TN 67 K 0312 | டிப்பர் லாரி | Rs.3000 | Rs.500 | Rs.30 | Rs.10 | -- |
| 9 | TN 67 AQ 8749 | JCB | -- | -- | Rs.50 | Rs.10 | Rs.5000 |
| | | | **Rs.19840** | **Rs.3000** | **Rs.249** | **Rs.90** | **Rs.5000** |

சாலைவரி ரூ.19840/- ஐ வரைவோலையாகவும், பசுமை வரி, கூடுதல் வரி, சர்வீஸ் கட்டணம், மற்றும் ஜே.சி.பி. வாகனத்தின் சாலைவரி ஆகிய தொகைகள் மொத்தம் ரூ.8339/ ஐ ரொக்கமாகவும், வட்டார போக்குவரத்து துறைக்கு செலுத்த மன்ற அனுமதிக்கு.

***ந. க. எண் 4036/2013/ எச் 1***

**பொருள் எண் :131**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 AZ 1287 க்கு மின்கலம் பொருத்தி 2 வருடங்களுக்கு மேல் ஆனதால் மின் கலம் உழைப்பு தன்மை குறைந்து விட்டது. எனவே TN 67 AZ 1287 க்கு புதிய மின்கலம் ( 13 பிளேட் ) வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,700/ க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) அனுமதிக்கலாம்.
2) இச் செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந. க. எண் 1512/2019/ எச் 2

**பொருள் எண் :132**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 K 0312 க்கு 06.06.2019 ம் தேதி அன்று தகுதிச் சான்று முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறத் தேவையான கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/ க்கும், மேற்படி பழுது பணிகளை மேற்கொள்வதற்கான தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு.

**வேலைகளின் விபரம்**

1) வண்டியில் உள்ள அனைத்து ஆயில்கள், மற்றும் டீசல் பில்டர், மற்றும் ஆயில் பில்டர் புதியது மாற்றுதல்.
2) கிளட்சு சம்மந்தப்பட்ட வேலைகள் சரி செய்து புஷ்கிட் புதியது மாற்றுதல்.
3) வாட்டர் பம்ப் புதியது மாற்றி ரேடியேட்டர் சர்வீஸ் செய்து மற்றும் பேன் பெல்ட் புதியது மாற்றுதல்.
4) வண்டியில் உள்ள முன்பக்க தொட்டி மற்றும் பின்புறமுள்ள தொட்டியில் டிங்கரிங் வேலைகள் சரிசெய்தல்.
5) பட்டை கட்டு விரைப்பு ஏற்றி புஷ்கட் புதியது மாற்றி இதர வேலைகள் சரி செய்தல்.
6) நான்கு புறமுள்ள வீல்களில் கிரீஸ் பேக்கிங் செய்து, வயரிங் வேலைகள் செய்தல்.
7) பிரேக் சம்மந்தப்பட்ட அனைத்து வேலைகள் சரி செய்தல்.
8) வண்டியில் உள்ள கலர் பெயிண்ட் புதுப்பித்து FC க்கு இதர வேலைகள் சரி செய்தல்.
9) தகுதி சான்றிதழ் மற்றும் மாசு கட்டுப்பாடு சான்றிதழ் புதுப்பித்து தருதல்.

**ந.க.எண் 2576 / 2019/ H2**

**பொருள் எண் :133**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 K 9704 மற்றும் TN 84 4592 க்கு 21.06.2019 ம் தேதி அன்று தகுதிச் சான்று முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறத் தேவையான கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.42,600/ க்கும், மேற்படி பழுது பணிகளை மேற்கொள்வதற்கான தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோர மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.*

**வேலைகளின் விபரம்**

1) 6 வீல் கிரீஸ் பேக்கிங் செய்ய வேண்டும், டெய்லர் வீல் பேரிங்குகள் 2 எண்ணம் புதியது.
2) ஆயில் பில்டர், டீசல் பில்டர் புதியது மாற்றுதல்.
3) பவர் பேரிங் ஜாக்கி வேலை பார்க்க வேண்டும்.
4) டெய்லர் ஜாக்கி வேலை பார்க்க வேண்டும்.
5) டெய்லர் தொட்டி பழுதான இடத்தில் புதிய தகடு பொருத்த வேண்டும்.
6) டாப் துணி புதியது, டிரைவர் சீட் துணி புதியது, ரேடியேட்டர் சர்வீஸ் பார்க்க வேண்டும்.
7) இன்ஜின் மற்றும் டெய்லர், டிங்கர் வேலை பார்த்து, பெயிண்டிங் அடித்து எழுத்து பார்க்க வேண்டும்.
8) வயரிங் வேலை பார்த்து செட் புதியது மாற்ற வேண்டும்.
9) தகுதி சான்றிதழ் மற்றும் மாசு கட்டுப்பாடு சான்றிதழ் புதுப்பித்து தருதல்.

**ந.க.எண் 2396/2019/ எச் 2**

**பொருள் எண் :134**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 84 C 9626 க்கு முன் பக்கமுள்ள இரண்டு டயர்களும் தேய்ந்து விட்டதால், மேற்படி வாகனத்திற்கு ரீ பட்டன் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12,000/ க்கு மன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு :-*** *அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 1247/2019/ எச்2

**பொருள் எண் :135**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு 2019-20 ம் ஆண்டிற்கு பணியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அலுவலக நிமித்தம் காரணமாக வெளியூர் சென்று வருவதற்கு பயணப்படி அந்தந்த மாதங்களுக்கு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கும் இத்தொகையினை நகராட்சியின் பொது நிதியின் கீழ் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்காக.*

**பொருள் எண் :136**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் வடபுறம் முன்னாள் படைவீரர் சுகாதார பங்களிப்பு மருத்துவமனையாக செயல்பட்டு தற்போது காலியாக உள்ளதால் மேற்படி கட்டிடத்தை முன்னாள் படைவீரர் நல அலுவலகம் செயல்பட அரசு வழிகாட்டுதலின்படி நிர்ணயம் செய்துள்ள மாத வாடகைத் தொகை ரூ.18676/- மற்றும் GST. 3362/- ஆக மொத்தம் ரூ.22038/- க்கு எடுத்துக் கொள்ள உதவி இயக்குநர் முன்னாள் படை வீரர் நலன் விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ( இருப்பு ) அவர்களின் கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ள கடித ந.க.எண் 1639/2019/ அ1, நாள் 11.04.2019 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி கட்டிடத்திற்கு அரசு வழிகாட்டுதலின்படி நிர்ணயம் செய்யப் பட்டுள்ள மாத வாடகை ரூ.18676/- ஐ மன்றம் அங்கீகரிக்கவும், நகராட்சி ஒப்பந்த விதிகள் மற்றும் குத்தகை விதிகளுக்குட்பட்டு முன்னாள் படைவீரர் நல அலுவலகம் செயல்படுவதற்கு கட்டிடத்தை ஒதுக்கீடு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு:-*** 1) *பார்வையிட்டு பதிவு செய்யலாம்.*
2) *அனுமதிக்கலாம்.*

**பொருள் எண் :137**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஜீத் நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பணியாளர் குடியிருப்பில் கதவு எண் 2,4,7 ஆகிய வீடுகள் தற்போது காலியாக உள்ளது. மேற்படி குடியிருப்பில் கதவு எண் 4 ம் எண் கொண்ட வீட்டை மாத வாடகைக்கு ஒதுக்கீடு செய்து தரும்படி இந்நகராட்சி துப்புரவு பிரிவில் ஓட்டுநராக பணியாற்றி வரும் திரு. பெ. கோபால்சாமி என்பவர் 10.04.2019 ல் விண்ணப்பித்துள்ளார். அன்னாருக்கு கதவு எண் 4 ம் எண் வீட்டை நகராட்சி ஒப்பந்த விதிகள் மற்றும் குத்தகை விதிகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலகக்குறிப்பு:-*** அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2030/2019/ அ 3

**பொருள் எண் :138**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொதுப் பிரிவு ( லேட் ) திரு. அண்ணாத்துரை / முனியாண்டி, துப்புரவு பணியாளர் என்பவர் 11.07.1998 முதல் துப்புரவு பணியாளராக பணியாற்றி 22.04.2016 ல் பணியிடை மரணமடைந்தார். அன்னாரின் வாரிசு தொடர்பான வழக்கு எண் OS No. 27/2018, District Munsif Court ல் நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கு சம்மந்தமாக நகராட்சி சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சௌந்தரராஜன், அவர்கள் மூலம் நடத்தவும், அதற்கான வழக்கு கட்டணம் ரூ.2500/ ஐ வழங்கவும் மன்றப் பொருள் அனுமதிக்கு.

***அலுவலகக்குறிப்பு:-*** 1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
ந.க.எண் 2766/2017/ எச் 1.

**பொருள் எண் :139**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2288/P3/2019, Dated: 25.02.2019 ன் படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 07.03.2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல் திட்டத்தை ஒவ்வொரு நகராட்சியும் தங்களுக்கென தனித்தனியாக தயார் செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல் திட்டம் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 2288/P3/2019, Dated:26.03.2019 ன் படி இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல்திட்ட அறிவுரைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதுடன், மேற்படி கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்துவதற்கான கொள்ளை மற்றும் செயல் திட்டத்தினை, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்கு ஏற்படும் செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

***அலுவலகக்குறிப்பு:-*** 1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 2288/P3/2019, Dated:26.03.2019 ல் பதிவு செய்யலாம்.
2) இந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகன் செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையை மாவட்ட அரசிதழில் வெளியிடலாம்.
3) அரசிதழில் வெளியிடுவதற்கான செலவு தொகையை பொது நிதி மூலம் செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3219/2017/ எச் 1**

**பொருள் எண் :140**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 AZ 1287 க்கு 03.05.2019ம் தேதியுடன் தகுதிச் சான்று முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறத் தேவையான கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.58000/ க்கு மன்ற அனுமதிக்கு.

***வேலைகள் விபரம்***

1) இஞ்ஜின் ஆயில், கியர் ஆயில்,கிரவுன் ஆயில் மாற்றுதல்.
2) நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து ஆயில் சீல் மாற்றுதல்.
3) பிரேக் செக்அப் செய்து நான்கு வீல் சிலிண்டர்கள் மாற்றி பிரேக் ஓவராயிலிங் செய்தல்.
4) ஸ்டேரிங் பாக்ஸ் ஓவராயிலிங் செய்து செக்அப் செய்தல்.
5) கிளட்ச் மேல் சிலிண்டர், கீழ் சிலிண்டர் மாற்றி செக்அப் செய்தல்.
6) ஜாயிண்ட் போல்ட் நட்டுகள் மாற்றி செக்அப் செய்தல், இதர போல்ட் நட்டுகள் பொருத்துதல்.
7) ஹைட்ராலிக் ஆயில் பம்பு சீல் மாற்றுதல்.
8) இஞ்ஜின் ஏர்பில்டர் அசெம்பிள் செய்தல்.
9) சின்ன ஜாக்கி ஆயில் சீல் மாற்றுதல்.
10) ஹைட்ராலிக் பெரிய ஜாக்கி ஆயில் சீல் மாற்றி ஓவராயிலிங் செய்தல்.
11) ஹைட்ராலிக் சின்ன ஜாக்கி கார்பெட் பிரண்ட் பேக் ஆக்சில் போட்டு வெல்டிங் செய்தல்.
12) வண்டியின் பாடியில் வெல்டிங் வேலைகள் செய்தல்.
13) வண்டியில் உள்ள எலக்ட்ரிக்கல் வேலைகள் பார்த்து வயர்கள் செக்அப் செய்து பல்புகள் பொருத்தி செல்ப் ஸ்டார்ட்டர் ஓவராயிலிங் செய்தல்.
14) வண்டியில் உள்ள கலர் பெயிண்ட் அடித்து இதர வேலைகள் செய்தல்.
15) வாகனத்திற்கு ஒலி நாடா ஒட்டுதல், மாசு கட்டுப்பாடு சான்றிதழ் பெற்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற்று தருதல்.

***அலுவலகக்குறிப்பு:-*** அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1715/2019/ எச் 2.

**பொருள் எண் :141**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட ரெங்கநாதபுரம் வடக்கு தெருவில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள வறண்ட கிணற்றினை பொது மக்களின் பாதுகாப்பு கருதி சுற்றுச் சுவரை உயர்த்த வேண்டியதும், மேலும் கிணற்றினுள் குப்பைகளை போடாமல் இருக்க சுற்றுச் சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு weld mesh மற்றும் இரும்பினால் ஆன மூடி ஒன்று அமைப்பதும் அவசியமாகிறது. மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/ க்கு மன்ற அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி பொது மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை RA 267 Srivi Block Agro Engg. Service Ltd என்ற நிறுவனத்தின் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் மேற்கொண்டதையும் அங்கீகரிக்க.

**ந. க. எண் 1355/2019/E1**

**பொருள் எண் :142**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 20 ல் சக்கரைக்குளம் தெருவில் Micro Compost Centre அமைக்கும் பணிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP (MD) No.12576/2019 என்ற எண்ணில் 2 வது எதிர்வாதியாக நகராட்சி ஆணையாளரை இணைத்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு. P. Srinivas வழக்கறிஞர் வாதிடவும், வழக்கறிஞருக்குரிய கட்டணம் வழங்கவும் அனுமதிக்கு.

**ந. க. எண் 3181/2019/E1**

**பொருள் எண் :143**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9, ரைட்டன்பட்டி ஓட்டமடம் தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தினை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/ மேற்கண்ட செலவுத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கு.

**ந. க. எண் 0885/2019/E1**

**<u>பொருள் எண் :144</u>**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஜீத் நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பணியாளர் குடியிருப்பில் கதவு எண் 7 ல் உள்ள வீடு தற்போது காலியாக உள்ளது. மேற்படி குடியிருப்பில் காலியாக உள்ள வீட்டு கதவு எண் 7 ஐ மாத வாடகைக்கு ஒதுக்கீடு செய்து தரும்படி இந்நகராட்சி சுகாதார பிரிவில் ஓட்டுநராக பணியாற்றி வரும் திரு. பா. செந்தில்குமார், என்பவர் 07.05.2019 ல் விண்ணப்பத்துள்ளார். அன்னாருக்கு கதவு எண் 7 உள்ள வீட்டினை நகராட்சி ஒப்பந்த விதிகள் மற்றும் குத்தகை விதிகளுககுட்பட்டு ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.*

***<u>அலுவலகக்குறிப்பு:-</u>*** *அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2587/2019/ அ 3.

**<u>பொருள் எண் :145</u>**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஜீத் நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பணியாளர் குடியிருப்பில் கதவு எண் 2,7 ஆகிய வீடுகள் தற்போது காலியாக உள்ளது. மேற்படி குடியிருப்பில் காலியாக உள்ள வீட்டு கதவு எண் 2 ஐ மாத வாடகைக்கு ஒதுக்கீடு செய்து தரும்படி இந்நகராட்சி பொது பிரிவில் இரவு காவலராக பணியாற்றி வரும் திரு. அ. மாடசாமி என்பவர் 16.05.2019 ல் விண்ணப்பித்துள்ளார். அன்னாருக்கு கதவு எண் 2 உள்ள வீட்டினை நகராட்சி ஒப்பந்த விதிகள் மற்றும் குத்தகை விதிகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***<u>அலுவலகக்குறிப்பு:-</u>*** *அனுமதிக்கலாம்.*

ந.க.எண் 2817/2019/ அ3.

**<u>பொருள் எண் :146</u>**

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 84 4592 க்கு வாகன காப்பீடு 14.06.2019 ம் தேதி முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 15.06.2019 முதல் 14.06.2020 வரை உள்ள காலத்திற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு அவசர அவசியம் கருதி காப்பீட்டுத் தொகை ரூ.1784/ ஐ யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு :-***

1) *அனுமதிக்கலாம்.*
2) *இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.*

**ந.க.எண் 4036/2013/H2**

<u>பொருள் எண் :147</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் FSTP அமைக்க மன்ற தீர்மான எண் 807 நாள் 31.10.2018 ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை உத்திரவு Roc.No. 26888/UGSS-2/2018-17, நாள் 15.11.2018 நிர்வாக அனுமதி அளித்ததன் அடிப்படையில் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு பெற்று வேலைத் தளத்தை தயார் செய்யும் பணி மேற்கொண்டு வந்த நிலையில் 15.02.2019 அன்று தினத்தந்தி நாளிதழில் மேற்படி உரக்கிடங்கின் வழியாக நான்கு வழிச்சாலை அமைய இருப்பதாகவும் அதனால் அது சம்பந்தமான நில எடுப்பு செய்யப்படும் என அறிவிப்பு வெளியானதற்கிணங்க வேலை நிறுத்தப்பட்டது. எனவே மேற்படி திட்டப் பணியினை விரைவாக முடிக்கும் பொருட்டு மாற்று இடம் நகர்சார் ஆய்வாளரிடம் கேட்டதில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட மருத்துவர் காலணியில் மேற்படி பணியினை மேற்கொள்ள போதிய இடம் உள்ளதாக தெரிவித்துள்ளார். அதற்கிணங்க நகராட்சி உரக்கிடங்கில் அமையவிருந்த FSTP பணியினை மருத்துவர் காலணியில் மாற்றி அமைக்க மன்ற அனுமதிக்காக.

**ந.க. எண் ( 1505/2018/E1)**

<u>பொருள் எண் :148</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண் 30322/2012/E3, Dated:17.06.2014 ன்படி URBAN ADMINISTRATION BUILDING SOCIETY கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி பங்குத் தொகையை செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குரிய 3 வது பங்குத தொகை ரூ.4,61,000/- ஐ செலுத்துவதற்கு அனுமதிக்கு.

**ந.க. எண் ( 0489/2018/E1)**

<u>பொருள் எண் :149</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி சக்கரைக்குளம் தெருவில் நுண் உரக்குடில் ( Micro Compost Centre) அமைக்கும் பணிக்கு 01.11.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் மேற்படி இடத்தில் ஒரு வேப்பமரம் இருந்ததால் அதை அகற்ற வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் அனுமதி பெற்று முறையாக ஏலம் விடப்பட்டு 18.12.2018 அன்று மேற்படி மரத்தினை அகற்றி பணியை துவக்கிய போது மேற்படி பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில் நடந்த சமாதானக் கூட்டத்தில் மாற்று இடத்தில் அமைக்க வேண்டும் என தெரிவித்து சென்றதினால் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், மதுரை உயர்நீதி மன்ற கிளையில் திரு. பாஸ்கர் என்பவர் மேற்படி பணிக்கு தடையினை கேட்டு வழக்கு WP (MD) No 12576/19 தொடர்ந்துள்ளார். இந்நிலையில் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், திட்டப்பணியை விரைந்து முடிக்க வேண்டியும் மேற்படி 3TPD நுண் உரக்குடில் அமைக்கும் பணியை மடவார் விளாகத்தில் உள்ள நகராட்சி இடத்தில் மாற்றி அமைக்கவும், சக்கரைக்குளம் பகுதியில் நுண் உரக்குடில் அமைக்கும் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட அதே ஒப்பந்தகார நிறுவனமான R.A.267 ஸ்ரீவி வட்டார வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மைய லிட், நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

**ந.க. எண் ( 3192/2018/E1)**

<u>பொருள் எண் :150</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ரைட்டன்பட்டி அசோக்நகர் தெருவில் நுண் உரக்குடில் (Micro Compost Centre ) அமைக்கும் பணிக்கு 01.11.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்ட சென்னை, உயர்நீதி மன்ற மதுரை கிளையின் தடை உத்திரவு WP (MD) No 22479/18 & Wp (MD) No 20337/18 நாள் 02.11.2018 என்ற தடையாணை உத்திரவு மூலம் வேலை தொடங்கிய நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டது. நகராட்சி வழக்கறிஞர் மூலத் தடையாணை உத்திரவை ரத்து செய்ய முயற்சி எடுத்தும் 7 மாதங்களாக வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லாத காரணத்தினால் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டி இருப்பதால் மேற்படி நுண் உரக்குடில் அமைய இருக்கும் இடத்தை நகராட்சி உரக்கிடங்கில் அச்சங்குளம் சாலையின் மேற்குபுறம் உள்ள பகுதியில் மாற்றி அமைக்கவும் ரைட்டன்பட்டி அசோக்நகர் பகுதியில் நுண் உரக்குடில் ( Micro Compost Centre) அமைக்கும் பணிக்கு பணி உத்திரவு வழங்கப்பட்ட அதே ஒப்பந்தகார நிறுவனமான R.A.267 ஸ்ரீவி வட்டார வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மைய லிட், நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

**ந.க. எண் ( 3192/2018/E1)**